## காசாவில்

# அப்பாவி மனிதர்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும்!

## வலைதளப் பதிவில் — முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, செப். 20 - காசாவில் அப்பாவி மனிதர்கள் கொல்லப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:

உயிருக்குப் போராடும் காசா, உலகம் கண்டுகொள்ளாமல் இருக்கக் கூடாது!

காசாவில் அரங்கேறி வரும் கொடுமைகளால் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு அதிர்ந்து போயிருக்கிறேன். அங்கிருந்து வெளிவரும் ஒவ்வொரு காட்சியும் நெஞ்சைப் பதறச் செய்கிறது.

பச்சிளம் குழந்தைகளின் அழுகுரல், பட்டினியில் தவிக்கும் சிறார்கள், மருத்துவமனைகள் மீது நடத்தப்படும் குண்டுவீச்சு, ஐ.நா. விசாரணை ஆணையமே அங்கு இனப்படுகொலை நடந்து வருவதாக அளித்துள்ள அறிக்கை ஆகிய அனைத்தும், எந்த மனிதரும் எப்போதும் அனுபவிக்கக் கூடாத துன்பங்களை அங்கு அனுபவித்து வருவதையே காட்டுகிறது.

அப்பாவி மனித உயிர்கள் இப்படி கொல்லப்படும்போது, அமைதியாக இருப்பது என்பது ஒரு தேர்வாக இருக்க முடியாது. நம் ஒவ்வொருவரின் மனசாட்சியும் விழிக்க வேண்டும். இந்தியா உறுதியான நிலைப்பாட்டோடு பேச வேண்டும், உலகம் மொத்தமும் ஒன்றிணைய வேண்டும். இந்தக் கொடூரத்தை இப்போதே தடுத்து நிறுத்த நாம் அனைவரும் இணைந்து செயல்படவேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## ஆவணக் காப்பாளர்கள் பணி

# அரசு நிர்வாகத்திற்கும் வரலாற்றுக்கும் இன்றியமையாதது!

## உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பேச்சு!




சென்னை, செப்.20-

சென்னை, கிண்டி, ஐ.டி.சி. கிராண்ட் சோழா (ITC Grand Chola), இராஜேந்திரா ஹாலில் (Rajendra Hall) நேற்று முன்தினம் (18.09.2025) புது தில்லி தேசிய ஆவணக்காப்பகம் மற்றும் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி, சென்னை இணைந்து நடத்தும் 50ஆவது தேசிய ஆவணக்காப்பாளர்கள் குழுக் கூட்டத்தை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன் தொடங்கி வைத்தார்.

இந்திய தேசிய ஆவணக் காப்பகமும், தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையும் இணைந்து நடத்தும் தேசிய ஆவணக்காப்பாளர்கள் குழுவின் 50ஆவது கூட்டத்தின் (பொன்விழா) தொடக்க விழா தமிழ்நாட்டில் முதன் முறையாக நேற்று முன்தினம் (18.09.2025) சென்னை, ஐடிசி கிராண்ட் சோழா ஓட்டல், இராஜேந்திரா அரங்கில் நடைபெற்றது.

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பொன்விழாக் கூட்டத்தை துவக்கி வைத்து தலைமையுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், தேசிய ஆவணக்காப்பகத் தலைமை இயக்குநர் சஞ்சய் ரஸ்தோகி, தமிழ்நாடு உயர்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் பொ.சங்கர், தமிழ்நாடு ஆவணக்காப்பக முதன்மைச் செயலாளர் / ஆணையர் ஹர் சஹாய் மீனா மற்றும் தேசிய ஆவணக்காப்பக உயர் அலுவலர்கள், தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதில் அமைச்சர் கோவி செழியன் பேசியதாவது:-

இந்திய ஆவணக்காப்பாளர்களின் பொன்விழா ஆண்டினை தமிழ்நாடு அரசின் ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை தலைமையில் கொண்டாடுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன். ஆவணங்கள் அரசு நிர்வாகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றன. ஐரோப்பியர்களின் வருகைக்கு முன் கல்வெட்டுகளும் செப்பேடுகளுமே அரசு ஆவணங்களாக இருந்து வந்தன. கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக்குப் பிறகு காகித ஆவணங்கள் உருவாகின. அவற்றை முறையாக பாதுகாப்பதற்காக சென்னை, மும்பை மற்றும் கொல்கத்தா மாகாணங்களில் ஆவணக்காப்பகங்கள் (Record Office) உருவாக்கப்பட்டன. அவற்றில் 1805 முதல் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் பழமையானது.

கடந்த 1968ஆம் ஆண்டு Madras Record Office என்பது தமிழ்நாடு ஆவணக்காப்பகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேலும், முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1972ஆம் ஆண்டு தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் துவக்கி வைக்கப்பட்டது.

அனைத்துத் துறை அரசு ஆவணங்களும் முறையாக அட்டவணைகளாக தயாரிக்கப்பட்டு, உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. முந்நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ஆவணங்களை தனக்கே உரியதாக கொண்டுள்ளது. சுமார் 40 கோடி ஆவணங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் பிற பல்கலைக்கழகங்களாலும் அங்கீகரிக்கப்பட்ட வரலாற்று ஆராய்ச்சி மையமாக திகழ்கிறது. இங்குள்ள ஆவணங்களைப் பயன்படுத்தி பல முக்கியமான தென்னிந்திய வரலாற்று நூல்கள் எழுதப்பட்டுள்ளன. பல மேலை நாட்டு வரலாற்று அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் இங்கு ஆய்வு செய்து, உலகப்புகழ் பெற்ற நூல்களை வெளியிட்டுள்ளனர்.

வரலாற்று ஆராய்ச்சியை ஊக்கப்படுத்தவும், நமது வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ளவும், தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மீள் உருவாக்கம் செய்யப்பட்டது. இதன் மூலம் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மாதம் ரூ.25,000/ உதவித்தொகை வழங்கவும் நமது முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

இன்று வெளியிடப்பட்டிருக்கும் இரண்டு நூல்களுக்கும் அடிப்படையாக விளங்கும் South Indian Rebellion, 1800-1801 என்னும் நூலை, இந்தியாவின் புகழ்பெற்ற பேராசிரியர் முனைவர் கே. இராசையன் அவர்கள், 1700 முதல் 1805 வரையிலான முதன்மை ஆவணங்களை ஆராய்ந்து எழுதியுள்ளார். இதுபோன்று நூற்றுக்கணக்கான வரலாற்று நூல்கள் தமிழ்நாடு ஆவணக் காப்பக ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன.

நம் விடுதலை வேள்வியில் தமிழகத்தின் பங்கினை வெளிப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள், தமிழ்நாட்டு வீரர்களின் தியாகத்தை சித்தரிக்கின்றன. தமிழ்நாட்டு மண்ணில் முதன் முதலாக வெள்ளையனை எதிர்த்த பூலித்தேவன், தூக்கு மேடையில் வீரமரணம் தழுவிய வீரபாண்டிய கட்டபொம்மன், தென்னிந்தியப் புரட்சியை ஒருங்கிணைத்து (1800-1801) வரலாற்றில் அழியாத இடம் பெற்ற மருது சகோதரர்கள் ஆகியோரின் தியாகங்களையும் வீரத்தையும், வேலூர் சிப்பாய்க் கலகத்தில் உயிரிழந்தோரின் துயர நிகழ்வுகளையும் ஆவணங்களின் அடிப்படையில் இந்த நூல்கள் பதிவு செய்கின்றன.

தமிழ்நாடு அரசின் நிர்வாகத் தேவைகளுக்காக பழைய ஆவணங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், அவற்றை வழங்கும் பணியையும் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மேற்கொண்டு வருகிறது. பழைய ஆவணங்களை நீண்ட காலம் நிலைத்திருக்கச் செய்வதற்காக ஜப்பான் திசு முறையைப் பயன்படுத்தி செப்பனிடுதல் போன்ற நவீன முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் ரூ.10 கோடியினை வழங்கியுள்ளார்கள். அதன் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதனை செம்மைப்படுத்த நடப்பாண்டில் மேலும், 10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயம், ஆவணங்களை மின்னணு வடிவில் ஆராய்ச்சியாளர்கள் எளிதாக அணுகக் கூடியவாறு மாற்றவும், ஆவணங்களை சேதத்திலிருந்து பாதுகாக்கவும் எண்ணிமப்படுத்தும் (Digitization) பணிகளில் தமிழ்நாடு ஆவணக்காப்பகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இந்திய ஆவணக்காப்பகங்களின் ஆவணக்காப்பாளர்களை இங்கு ஒருங்கிணைந்திருப்பதைப் பார்ப்பதில் நான் பெருமை கொள்கிறேன். அரசு நிர்வாகத்திற்கும் வரலாற்று ஆராய்ச்சிக்கும் ஆவணங்கள் அளிக்கும் பங்களிப்பு அளப்பரியது. புராணங்கள், கட்டுக் கதைகளின் கூற்றுகளை நம்பாமல், இந்தியாவின் உண்மை வரலாற்றை ஆராய்வதற்காக ஆவணங்களைத் தேடி வரும் அறிஞர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஆதாரங்களை வழங்கும் ஆவணக்காப்பாளர்களின் பணி மிகவும் முக்கியமானது. இந்திய ஆவணக்காப்பாளர்களின் பொன்விழா கூட்டத்தை தமிழ்நாட்டில் நடத்துவதில் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பெருமை கொள்கிறது. ஆவணக் காப்பாளர்களின் சேவை மேலும் சிறக்க என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஆவணக்காப்பாளர்களின் பணி அரசு நிர்வாகத்திற்கும், அதன் வரலாறு மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்கும் இன்றியமையாதது என்பதை வலியுறுத்தி என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் பேசினார்.




தலைமைச் செயலகத்தில், 18.9.2025 அன்று மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் தலைமையில் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூயின் 20வது ஆளுமைக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்/ அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி இயக்குநர் மற்றும் பயிற்சித் துறை தலைவர் தி விக்ரம் கபூர், மனித வள மேலாண்மைத் துறை செயலாளர் மற்றும் குழு உறுப்பினர் சி. சமயமூர்த்தி, சிறப்புச் செயலாளர் (நிதி) என். வெங்கடேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




பெரம்பலூர் மாவட்டத்தில், ஆ.இராசா.எம்.பி., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் இருவரும்,800 சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளையும், மற்றும் 96 பயனாளிகளுக்கு ரூ.10,22,760 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்புரையாற்றினார்கள். இதில் மாவட்ட ஆட்சியர் ச.மிருணாளினி, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆதர்ஷ் பச்சேரா, சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் ஆகியோர் உள்ளனர்.

## அமைச்சர் கே.என்.நேரு — அமைச்சர் கோவி.செழியன் — முனைவர் சபாபதிமோகன் சிறப்புரை!

# தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சை, செப்.20-

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தஞ்சையில் “ஓரணியில் தமிழ்நாடு” பொதுக் கூட்டத்தில் கழகத் தோழர்கள் திரளாது கலந்து கொள்ள வேண்டி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : முதல்வர், கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பினை ஏற்று தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மண் - மொழி - மானம் காக்க இணைவோம், “ஓரணியில் தமிழ்நாடு“ பொதுக் கூட்டம் நாளை (21.09.2025 -ஞாயிறு) மாலை 05.00 மணியளவில் தஞ்சாவூர் ஆபிரகாம் பண்டிதர் ரோடு, சாந்தி கமலா தியேட்டர் அருகில் நடைபெற உள்ளது.

இப்பொதுக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், கழக கொள்கைப்பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதி மோகன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

அதுசமயம், பொதுக்கூட்டத்தில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## முன்னாள் அமைச்சர் க.பொன்முடி சிறப்புரை! தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர் செப்.20-

தஞ்சை வடக்கு மாவட்டத்தில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று கும்பகோணத்தில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : கழகத் தலைவர், திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று இன்று (20.09.2025) மாலை 06.00 மணியளவில் கும்பகோணம் காந்தியடிகள் சாலையில் (மார்னிங் ஸ்டார் பள்ளி அருகில்) “தமிழ்நாட்டை தலைக் குனிய விடமாட்டேன்“ என்ற முழக்கத்துடன் தமிழக மக்களை ஒருங்கிணைத்து ஓரணியில் தமிழ்நாடு இயக்க தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

பொதுக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முன்னாள் அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான முனைவர் க.பொன்முடி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார். அதுசமயம் கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், கழக பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் - இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள்,

கழக முன்னோடிகள் மற்றும் ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தில் கழகத்தில் இணைத்த கழக உறுப்பினர்கள் அனைவரையும், அழைத்து வந்து பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




சேலம் மத்திய மாவட்டம் அம்மாபேட்டையில் உள்ள அண்ணா நற்பணி மன்றத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 117 வது பிறந்த தினத்தையொட்டி பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புடன் கூடிய எவர்சில்வர் பாத்திரங்களை மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர். இரா. இராஜேந்திரன் வழங்கினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே. சுபாசு. மு. கார்த்திகேயன் பகுதி செயலாளர். கே.டி.ஆர். தனசேகரன், அண்ணா நற்பணி மன்ற செயலாளர். கே. குமாரசாமி. தலைவர். பொட்டு. எம். ஞானசேகரன். பொருளாளர். பொட்டு பி.சேகர். பேர்லாண்ட்ஸ். ரவிக்குமார்.கே. கிருஷ்ணன். தொழிலதிபர்கள். துரைசாமி.அருண்ராஜ், ஆசிரியர்கள். செவ்வேள். சண்முகம் கலைச்செல்வன்.முருகன். கவுன்சிலர். திருஞானம் உட்பட மன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.